வேலூர் மாவட்டக் கல்வி அலுவலரின்(இடைநிலை) செயல்முறைகள்
ந.க.எண் .2221/ஆ5/2025 நாள் .07.2025

| | |
|---|---|
| பொருள் | பள்ளிக் கல்வி – அனைத்து அரசு/அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் 15 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவ /மாணவிகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடும் திட்டம் (Japanese Encephalitis Immunization Program) மாவட்ட சுகாதாரத்துறை மூலம் ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை நடைபெறுதல் - தொடர்பாக. |
| பார்வை | 1. வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின்(பொ) செயல்முறைகள் நகஎண்.3258/ஆ5/2025, நாள் 29.07.2025,<br>2. வேலூர் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலரின் கடித எண்.637/ஆ4/ 2025, நாள் 03.07.2025. |

======

வேலூர் மாவட்டத்தில் இயங்கும் அனைத்து அரசு/அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் 15 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவ / மாணவிகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடும் திட்டம் (Japanese Encephalitis Immunization Program) மாவட்ட சுகாதாரத்துறை மூலம் ஆகஸ்ட் 1-ம் தேதி முதல் 31-ம் தேதி வரை செயல்படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தடுப்பூசியின் அவசியத்தை அனைத்து மாணவ / மாணவிகளுக்கு காலை வணக்கக் கூட்டம் மற்றும் சுற்றறிக்கை மூலம் வகுப்பாசிரியர் வாயிலாகத் தெரிவித்து மேலும் பெற்றோர்களுக்கும் தகவலைத் தெரிவிக்க அறிவுறுத்த வேண்டும்.

மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்கள் தொடர்பு கொள்ளும் போது உரிய ஒத்துழைப்பினை நல்குமாறும் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

// ஒப்பம் xxx
மாவட்டக் கல்வி அலுவலர்
(இடைநிலை)
வேலூர்

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள்
அனைத்து அரசு/அரசு நிதிஉதவிபெறும் மற்றும் சுயநிதி பள்ளிகள்
வேலூர் மாவட்டம்.

நகல்
வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் (பொ)
அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.